பணிகள் நடைபெறும் இப்போதே திருவான்மியூரிலிருந்து சிலமைல்களுக்கு அப்பாலிருந்தே புதிய கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம்; யாருக்கும் இப்போது அனுமதி வழங்குவதில்லை. ஆகவே, 15 மைல் அல்லது 20மைல் தூரத்திலிருந்தே இயற்கைச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் திட்டம். அது அல்லாமல் புதிய நகரம் உருவாக்கும் திட்டம் இல்லை. இப்போது இருக்கிற அமைப்புக்களை ஒழுங்கு படுத்தி, சுற்றிலும் மரங்கள் வளர்க்க வேண்டுமென்பதை முக்கியமானத் திட்டமாக இன்றைக்கு அரசு மேற்கொண்டிருக்கிறது. மாமல்லபுரத்தில் மட்டுமல்ல; எங்கெங்கே வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் சாலைகள் சீரமைக்கப்பட்டு, மரங்கள் வளர்க்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு நோக்கமாகக் கொண்டிருக்கிறது, குறிப்பாக மாமல்லபுரத்தில் இயற்கைச் சூழ்நிலையை உருவாக்குகின்ற வகையில் வனத்துறை மரங்களை நட சுற்றுலாத் துறை ஆலோசனை வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தை உருவாக்கிய நரசிம்ம பல்லவனின் உறுதுணையான சிவகாமி அம்மையாரின் பெயரினை அங்கு ஏற்படும் அரங்குக்கு வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே குழந்தை பிறக்கட்டும்; அதற்குப் பிறகு பெயர் வைப்பது பற்றி யோசிக்கலாம்.

கோட்டாற்றில் சேக்குத் தம்பி பாவலருக்கு நினைவு மண்டபம்.

*வினா எண். 672—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேக்குத் தம்பி பாவலரின் நினைவாக நாகர்கோவிலை அடுத்த கோட்டாறில் நினைவு மண்டபம் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) சேக்குத் தம்பி பாவலருக்கு நினைவு மண்டபம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) வரைபடம் தயாரித்து, மதிப்பீடுகள் அங்கீகரிக்கப் பட்டபின் நினைவு மண்டபம் அமைக்கும் முயற்சி மேற் கொள்ளப்படும்.

1981 ஏப்ரல் 7]

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, இந்தியாவிலேயே சதாவதானி என்று பெயர் எடுத்த தமிழ்க் கவிஞர் சேக்குத் தம்பி பாவலருக்கு புரட்சித் தலைவரின் அரசு வந்த பிறகுதான் பிறந்த நாள் விழா எடுக்கப்பட்டது. ஆனால் அது மாவட்ட அளவில் எடுக்கப்பட்ட விழாவாதலால் மாநில அளவிலே ஒரு விழா எடுப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய அரசு முன்வருமா ?

மேலும், அமைக்க இருக்கின்ற நினைவு மண்டபத்தில் ஒரு நூல் நிலையத்தையும் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நினைவு மண்டபத்தை எப்படி அமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகு, அந்த மண்டபத்திலே நூலகம் அமைக்க முடியுமா அல்லது வேறு ஏதாவது அமைக்க வேண்டுமா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதாவதானி என்று பெயர் எடுத்த சேக்குத் தம்பி பாவலர் அவர்கள் மிகப் பெரிய ஒரு மேதை. அப்படிப்பட்ட மேதைகளைக் கவுரவிப்பதற்கு அரசாங்கம் நினைவு மண்டபம் அமைக்க எடுத்திருக்கின்ற முயற்சியை வரவேற்கிறேன். ஆனால், விரைவிலே அதைச் செய்வதற்குரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களே ஒரு அரைக் கவிஞர்தான். (ஆரவாரம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவிஞர் என்பதற்குப் பல பொருட்கள் உண்டு. அந்த மாதிரி ஏதாவது வந்துவிடப் போகின்றது. (ஆரவாரம்).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் பாதிக் கவிஞர் என்ற பொருளில்தான் சொன்னேன். சேக்குத் தம்பி பாவலர் அவர்களின் மீது நமது உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களுக்கு உள்ள அக்கறையைக் காட்டுவதற்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தக் கேள்விக்குத் தான் நான் முன்னாலேயே பதில் சொல்லி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : தலைவரவர்களே, நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவ்வாறு நினைவு மண்டபம் அமைப்பதற்கு எவ்வளவு ரூபாய் ஒதுக்கீடு செய்ய அரசு உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பெரியோர்களுக்கு நினைவு மண்டபங்கள் அமைப்பது என்று கொள்கை முடிவாக எடுக்கப்பட்டிருக்கின்றது. எப்படிப்பட்ட மண்டபங்கள் அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று துறையிலே இருந்து வரைபடங்கள் எல்லாம் கேட்டு இருக்கிறோம். ஆகவே எவ்வளவு செலவு என்பதை முன்னாலேயே கணக்கிட்டுக் கொண்டுதான் இப்படிப்பட்ட தலைவர்களுக்கு மண்டபம் அமைக்க வேண்டும் என்பதில்லை. காலுக்குத் தகுந்த செருப்புத்தான் வேண்டுமே தவிர, செருப்புக்குத் தகுந்த கால் என்பது சரியல்ல. ஆகவே அப்படிப்பட்ட கொள்கையை இப்படிப்பட்ட தலைவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்புகின்ற போது கைக்கொள்வதில்லை. ஆகவே திட்டங்கள் எல்லாம் வந்ததற்குப் பிறகு, வரை படங்கள் எல்லாம் வந்ததற்குப் பிறகு தான் எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

நாகர்கோவிலில் புதிய வானொலி நிலையம்.

*வினா எண். 673—திரு. சு. முத்துகிருஷ்ணன், திரு. ச. பலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டம் நாகர்கோவிலில் புதிய ரேடியோ நிலையம் அமைக்க மத்திய அரசு தமிழக அரசின் உதவியை நாடி உள்ளதா ?

(ஆ) இதற்கான இடத்தை அரசு இனாமாகக் கொடுத்து உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) ஆறாவது திட்டக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில், மாவட்ட அளவிற்கு ஒலிபரப்பும் சக்தி கொண்ட சிறிய வானொலி நிலையம் (Loc l R dio St t on) ஒன்றினை அமைக்கும் உத்தேசம் மத்திய அரசிடம் உள்ளது.

திரு சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, மத்திய அரசு நாகர்கோவிலிலே ஒரு ரிலே ஸ்டேஷன் அமைப்பதற்கு முயற்சிகள் எடுப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அதற்காக இடத்தைத் தேர்வு செய்கின்ற விதத்தில் தகுந்த இடம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றதா ? அப்படி இல்லை எனில் அதற்கான இடத்தை இனாமாகத் தருவதற்கு மாநில அரசு முன் வந்துள்ளதா ? அல்லது அப்படி இடத்திற்காக மத்திய அரசு மாநில அரசிடம் கேட்டுள்ளதா ?